கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

திட்டக்குடி.

**OS.8/2018** **PW: 1** **10.07.2025**

2025 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 10 ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சுசிலா என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.)ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுசிலா | வயது | 75 |
| த/க. பெயர் | வேலாயுதம் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | கீழ்செறுவாய் |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

இரண்டாம் வாதியான வேலாயுதம் என் கணவர் ஆவார். இந்த வழக்கிலுள்ள பிரதிவாதிகள் பெரியசாமியினுடைய குடும்பத்தினர் என்றால் சரிதான். பெரியசாமியின் தந்தை பெயர் என்னவென்றால் சின்னய்யன். சின்னய்யன் என்பவருக்கு எத்தனை குமாரர்கள் என்றால் 2 பேர், அவர்கள் பெரியசாமி மற்றும் ஐயாசாமி. நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் Ex A1 வழக்கு சொத்திற்கு வடக்கில் பிரதிவாதிகளின் சொத்து என்று குறிப்பிட்டு, ஆனால் அதன் நீள, அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் எந்த வருடத்தில் கிரயம் பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் கிரயம் வாங்கிய சொத்து யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் பிச்சையம்மாள் அவர்களிடம் இருந்து வாங்கினேன். பிச்சையம்மாள் எந்த வருடத்தில் இறந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் பிச்சையம்மாள் அவர்களது வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிச்சையம்மாள் வழக்கு சொத்தை அனுபவித்ததற்காக வருவாய் ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளளேனா என்றால் நான் வாக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். பிச்சையம்மாள் வழக்கு சொத்தை எவ்வளவு நீளம், அகலம் அனுபவித்தார்கள் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வாக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். வள்ளியம்மை வழக்கு சொத்தை அனுபவித்தற்கும் எவ்வளவு நீளம், அகலம் அனுபவித்தார்கள் என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் நான் வக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். பிச்சையம்மாள் மற்றும் வள்ளியம்மை வழக்கு சொத்தை ஒரு காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. பிச்சையம்மாள் மற்றும் வள்ளியம்மை எவ்வாறு வழக்கு சொத்தை பெற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பிச்சையம்மாள் கிரயம் மூலம் வழக்கு சொத்தை பெற்று அவர்களது மகளான

வள்ளியம்மைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அந்த ஆவணங்களை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். வள்ளியம்மை யாருக்கு சொத்தை எழுதிகொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் வள்ளியம்மை செல்வத்திற்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார்கள். வள்ளியம்மை யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள், யார் சாட்சி கையெழுத்தை போட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் என் கணவர் உடன் இருந்தார், நான் அங்கு இல்லை, ஆனால் சாட்சிகள் பெயர் தெரியாது. வள்ளியம்மை அவர்களுக்கு வாரிசு இல்லை என்றால் சரிதான். வள்ளியம்மை அவர்களது சகோதரர்களின் பெயர் எனது முதல் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால் இல்லை. வள்ளியம்மை எழுதிவைத்த ஆவணம் வ.சா.ஆ. 2 ல் வழக்கு சொத்திற்கான சர்வே எண், நீள, அகலம் மற்றும் நான்கு எல்லைகள் குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது. வள்ளியம்மை எழுதி வைத்த ஆவணத்தில் வ.சா.ஆ. 2 ல் வழக்கு சொத்திற்கான விவரம் இல்லை என்றால் சரியல்ல. வள்ளியம்மை எந்த ஒரு ஆவணமும் எழுதிவைக்கவில்லை, வழக்கிற்காக பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான எந்த விவரமும் இல்லாமல் நான் எதன் அடிப்படையில் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் நான் வக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். நான் சொல்வது போல் வள்ளியம்மையும், செல்வமும் வழக்கு சொத்தை அனுபவிக்கவில்லை நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது வயதாகிவிட்டது. நான் வழக்கு சொத்தை அனுபவித்து வருவதற்கு ரசீதுகள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உரிமை இல்லாத செல்வத்திடம் இருந்து நான் கிரயம் பெற்ற வழக்கு சொத்து சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற ஆவணமும் வள்ளியம்மை அவர்கள் எழுதிக்கொடுத்த ஆவணமும் அமலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 2 வது இனச்சொத்து எனது மாமனார் சுப்ரமணியன் எந்த காலத்திலும் அனுபவிக்க இல்லை என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் சோலமுத்து என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். இந்த விவரத்தை நான் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவருடன் உடன் பிறந்தோர் 5 பேர். அவர்கள் - சண்முகம், பழனிவேல், சிங்காரம், கோவிந்தன் மற்றும் என் கணவர் வேலாயுதம். மேற்படி அவரிடம் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக என் கணவருக்கு வாய்மொழியாக பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையை எழுதி பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். எந்த வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு 2 வது இனச்சொத்தில் எனக்கோ என் கணவருக்கோ எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல, நாங்கள் கடந்த 40 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். வழக்கு 3 வது இனச்சொத்து பாதை என்பதற்கு எந்த ஆவணத்தில் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றாலும், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வக்கில் சாரிடம் கொடுத்துள்ளேன். 3 வது இனச்சொத்து பாதை எவ்வளவு அடி என்றால் 4 அடி தென்வடலாக உள்ளது. கீழ்மேல் 18 அடி உள்ளது. வழக்கு சொத்து எதிர்வாதிகள் அனுபவத்தில் தான் உள்ளது என்றும், எதிர்வாதிகள்

தங்களது நிலத்தில் தான் பைப்லைன் அமைத்தார்கள் என்றால் சரியல்ல. எதிர்வாதிகள் வழக்கு சொத்தை அனுபவித்து வருவதால் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்வதற்கு அவசியம் இல்லை என்றால் சரியல்ல, நான் கடந்த 40 வருடங்களாக அனுபவித்து வருகிறேன். நான் பிரதிவாதிகளை இடைஞ்சல் செய்ததால் தான் பிரதிவாதிகள் என் மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், நான் பிராதில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(S/d. N.Shalini)**
Additional District Munsif,
Tittagudi.